# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2264 - 2022 ජනවාරි මස 21 වැනි සිකුරාදා - 2022.01.21

*2264 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 160 | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | நானாவித அறிவித்தல்கள் | |


*கவனிக்க.- கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்பு சட்டமூலம் 2022, சனவரி மாதம் 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2022, பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, சனவரி மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

159 - B82310 - 5403 (2022/01)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## நுவரெலியா மாநகர சபை

### மாடறுத்தல் கட்டளைச்சட்டம்

*மாடறுத்தல் கட்டளைச்சட்டத்தின் (272 ஆம் அதிகாரத்தின்) 17(1) ஆம் பிரிவின் பிரகாரம் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக நுவரெலியா மாநகர சபையின் நகர முதல்வர் தேசமான்ய பீ.டி.சந்தன லால் கருணாரத்ன ஆகிய நான் 2022 ஆம் ஆண்டில் இங்கு கீழ் குறிப்பிட்டுள்ள அட்டவணைக்கமைய அதில் குறிப்பிட்டுள்ள தினங்களிலும் அரசாங்கத்தால் இடைக்கிடையே அறிவிக்கப்படும் தினங்களிலும் என்னால் இடைக்கிடையே வெளியிடப்படும் கட்டளைக்கு அமைவாகவும் நுவரெலியா மாநகர சபையின் அதிகார எல்லைக்குள் இறைச்சிக்காக விலங்குகளை கொல்லுதல், இறைச்சி விற்பனை, விற்பனைக்காக இறைச்சியை காட்சிப்படுத்தல் மற்றும் இறைச்சி வகைகளை விற்பனை செய்யும் இடங்களை திறந்து வைத்தல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

| | | | |
|---|---|---|---|
| 2022 ஆம் ஆண்டு | சனவரி | 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை | தைப்பொங்கல் |
| 2022 ஆம் ஆண்டு | சனவரி | 15 ஆந் திகதி சனிக்கிமை | தைப்பொங்கல் தினத்திற்கு மறுதினம் |
| 2022 ஆம் ஆண்டு | சனவரி | 17 ஆந் திகதி திங்கட்கிழமை | போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | பெப்புருவரி | 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை | சுதந்திர தினம் |
| 2022 ஆம் ஆண்டு | பெப்புருவரி | 16 ஆந் திகதி புதன்கிழமை | போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | மாச்சு | 01 ஆந் திகதி செவ்வாயக்கிழமை | மகா சிவராத்திரி |
| 2022 ஆம் ஆண்டு | மாச்சு | 17 ஆந் திகதி வியாழக்கிழமை | போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | ஏப்பிறல் | 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை | பெரிய வெள்ளிக்கிழமை |
| 2022 ஆம் ஆண்டு | ஏப்பிறல் | 16 ஆந் திகதி சனிக்கிழமை | போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | மே | 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை | மே தினம் |
| 2022 ஆம் ஆண்டு | மே | 15 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை | வெசாக் போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | மே | 16 ஆந் திகதி திங்கட்கிழமை | வெசாக் தினத்திற்கு மறுதினம் |
| 2022 ஆம் ஆண்டு | யூன் | 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை | பொசன் போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | யூலை | 13 ஆந் திகதி புதன்கிழமை | எசல போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | ஓகத்து | 11 ஆந் திகதி வியாழக்கிழமை | போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | செத்தெம்பர் | 10 ஆந் திகதி சனிக்கிழமை | போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | ஒற்றோபர் | 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை | உலக விலங்குகள் தினம் |
| 2022 ஆம் ஆண்டு | ஒற்றோபர் | 09 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை | போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | ஒற்றோபர் | 24 ஆந் திகதி திங்கட்கிழமை | தீபாவளி |
| 2022 ஆம் ஆண்டு | நவெம்பர் | 07 ஆந் திகதி திங்கட்கிழமை | போயா தினம் |
| 2022 ஆம் ஆண்டு | திசெம்பர் | 07 ஆந் புதன்கிழமை | போயா தினம் |

*அரசாங்கத்தினால் அறிவிக்கப்படும் ஏனைய தினங்கள்,*

தேசமான்ய பீ.டி.சந்தன லால் கருணாரத்ன,
நகரமுதல்வர் - நுவரெலியா மாநகர சபை

*மாநகர சபை அலுவலகம்,*
*நுவரெலியா.*
*2022.01.*

*01-165*

**கண்டி மாநகர சபை**

மாடறுக்கும் கட்டளைச் சட்டம்

மாடறுத்தல் கட்டளைச்சட்டத்தின் (272 ஆம் அதிகாரம்) இல. 17(1) பந்தியின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி கண்டி மாநகர பிதா கேசர டீ சேனாநாயக்க ஆகிய என்னால் 2022 ஆம் ஆண்டில் கண்டி மாநகர எல்லைக்குள் கீழ் காட்டப்பட்டுள்ள முதலாம் மற்றும் இரண்டாம் சராம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் விசேட காரணங்களுக்காக அரசாங்கத்தினால் என்னாலும் கட்டளையிடப்படுகின்ற வேறு திகதிகளிலும் இறைச்சிக்காக விலங்குகளை கொல்லுதல், இறைச்சி விற்பனை செய்தல், இறைச்சி விற்பனை செய்வதற்காக காட்சிப்படுத்தல் மட்டுமின்றி இறைச்சி வகைகளை விற்பனை செய்யும் இடங்களை திறந்து வைத்திருத்தல் போன்ற முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கேசர டீ சேனாநாயக,
மாநகர முதல்வர்

கண்டி நகர சபை அலுவலகம்,
2022, சனவரி, 10.

**முதலாவது அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| சனவரி | 17 | திங்கட்கிழமை | - | துருத்து முழு நோன்மதி தினம் |
| பெப்புருவரி | 16 | புதன்கிழமை | - | நவம் முழு நோன்மதி தினம் |
| மாச்சு | 17 | வியாழக்கிழமை | - | மெதின் முழு நோன்மதி தினம் |
| ஏப்பிறல் | 16 | சனிக்கிழமை | - | பக் முழு நோன்மதி தினம் |
| மே | 15 | ஞாயிற்றுக்கிழமை | - | வெசாக் முழு நோன்மதி தினம் |
| மே | 16 | திங்கட்கிழமை | - | வெசாக் முழு நோன்மதி தினத்திற்கு அடுத்த நாள் |
| யூன் | 14 | செவ்வாய்க்கிழமை | - | பொசொன் முழு நோன்மதி தினம் |
| யூலை | 13 | புதன்கிழமை | - | எசல முழு நோன்மதி தினம் |
| ஓகத்து | 11 | வியாழக்கிழமை | - | நிகினி முழு நோன்மதி தினம் |
| செத்தெம்பர் | 10 | சனிக்கிழமை | - | பினர முழு நோன்மதி தினம் |
| ஒற்றோபர் | 09 | ஞாயிற்றுக்கிழமை | - | வப் முழு நோன்மதி தினம் |
| நவெம்பர் | 07 | திங்கட்கிழமை | - | இல் முழு நோன்மதி தினம் |
| திசெம்பர் | 07 | புதன்கிழமை | - | உந்துவப் முழு நோன்மதி தினம் |

**இரண்டாவது அட்டவணை**

வருடத்தில் அனைத்து மாதத்தினதும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மற்றும் கீழ் காட்டப்பட்டுள்ள பொது விடுமுறை தினங்களிலும் அதற்கு மேலதிகமாக விசேட காரணங்களுக்காக அரசினாலும் என்னாலும் கட்டளையிடப்படுகின்ற ஏனைய நாட்களிலும்.

| | | | | |
|---|---|---|---|---|
| சனவரி | 14 | வெள்ளிக்கிழமை | - | தைப் பொங்கல் தினம் |
| பெப்புருவரி | 04 | வெள்ளிக்கிழமை | - | தேசிய சுதந்திர தினம் |
| மாச்சு | 01 | செவ்வாய்க்கிழமை | - | மஹா சிவராத்திரி தினம் |
| ஏப்பிறல் | 13 | புதன் கிழமை | - | சிங்கள, தமிழ் புத்தாண்டு தினத்திற்கு முன் தினம் |
| ஏப்பிறல் | 14 | வியாழக்கிழமை | - | சிங்கள, தமிழ் புத்தாண்டு தினம் |
| ஏப்பிறல் | 15 | வெள்ளிக்கிழமை | - | பெரிய வெள்ளி தினம் |
| மே | 01 | ஞாயிற்றுக்கிழமை | - | உலக தொழிலாளர் தினம் |
| மே | 03 | செவ்வாய்க்கிழமைம் | - | ஈதுல் பித்ர் (ரமழான் நோன்பு தினம்) |
| யூலை | 10 | ஞாயிற்றுக்கிழமை | - | ஈதுல் அல்ஹா (ஹஜ் உற்சவ தினம்) |
| ஒற்றோபர் | 04 | செவ்வாய்க்கிழமை | - | உலக விலங்குகள் தினம் |
| ஒற்றோபர் | 09 | ஞாயிற்றுக்கிழமை | - | (மீலாதுன் நபி) நபிகள் நாயகம் பிறந்த தினம் |
| ஒற்றோபர் | 24 | திங்கட்கிழமை | - | தீபாவளி பண்டிகை தினம் |
| திசெம்பர் | 25 | ஞாயிற்றுக்கிழமை | - | நத்தார் பண்டிகை தினம் |

01-215

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.